சித்திரைத் திருவிழா: சப்பரத் தேரில் ஆனந்தவல்லி, சோமநாதர் பவனி

மானாமதுரையில் சித்திரைத் திருவிழாவையொட்டி, செவ்வாய்க்கிழமை இரவு சப்பரத் தேரில் பவனி வந்த ஆனந்தவல்லி, பிரியாவிடை சமேத சோமநாதர் சுவாமி.

மானாமதுரை, மே 7: சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் நடைபெற்று வரும் சித்திரைத் திருவிழாவையொட்டி, செவ்வாய்க்கிழமை இரவு சப்பரத் தேரில் ஆனந்தவல்லியும், சோமநாதரும் பவனி வந்தனர்.

சிவகங்கை தேவஸ்தானத்துக்குள்பட்ட இந்தக் கோயிலில் நடைபெற்று வரும் சித்திரை திருவிழாவின் 6-ஆம் நாளான செவ்வாய்க்கிழமை இரவு ஆனந்தவல்லி அம்மனும், பிரியாவிடை சமேத சோமநாதர் சுவாமியும் ரிஷப வாகனங்களில் கோயிலுக்கு எதிரே அமைக்கப்பட்டிருந்த மண்டகப்படியில் சர்வ அலங்காரத்தில் எழுந்தருளினர்.

இதன்பிறகு, அம்மனுக்கும், சுவாமிக்கும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

ராஜேஷ் பட்டர், குமார் பட்டர் உள்ளிட்டோர் சுவாமிக்கான பூஜைகளை செய்தனர். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

இதைத் தொடர்ந்து, ஆனந்தவல்லியும், சோமநாதரும் சப்பரத் தேரில் எழுந்தருளி கோயிலைச் சுற்றிப் பவனி வந்தனர்.

காளையார்கோவில் அருகே ஜல்லிக்கட்டு

15 பேர் காயம்

சிவகங்கை, மே 7: சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் அருகே புதன்கிழமை நடைபெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டியில் மாடுகள் முட்டியதில் 15 பேர் காயமடைந்தனர்.

காளையார்கோவில் அருகேயுள்ள நல்லேந்தல் கிராமத்தில் தர்ம முனீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இந்தக் கோயில் திருவிழாவை முன்னிட்டு, ஜல்லிக்கட்டு போட்டி புதன்கிழமை நடைபெற்றது. இந்தப் போட்டியில் 700 காளைகள் பங்கேற்றன. ஒவ்வொரு சுற்றுக்கும் 20 மாடுபிடி வீரர்கள் களத்தில் இறக்கப்பட்டனர். இந்தப் போட்டியில் மாடுகள் முட்டியதில் 15 வீரர்கள் காயம் அடைந்தனர். இவர்களுக்கு உடனடியாக அங்கிருந்த முதலுதவி சிகிச்சை மையத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

காளையார்கோவில் அருகேயுள்ள நல்லேந்தல் கிராமத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில் காளையை அடக்க முயன்ற வீரர்கள்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கும், மாடுகளின் உரிமையாளர்களுக்கும் பல்வேறு பரிசுகள் வழங்கப்பட்டன.

ஜல்லிக்கட்டு போட்டியை காளையார்கோவில், மாராத்தூர், மரக்காத்தூர், மறவமங்கலம், காயாஓடை, சிலுக்கப்பட்டி உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த திரளானோர் கண்டு ரசித்தனர்.

பண்ணவயல் கோயிலில் முளைப்பாரித் திருவிழா

திருவாடானை, மே 7: ராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை அருகேயுள்ள பண்ணவயல் முத்துமாரியம்மன் கோயில் முளைப்பாரித் திருவிழாவை முன்னிட்டு, பக்தர்கள் முளைப்பாரி எடுத்து வீதி உலா வந்து, கண்மாயில் கரைத்தனர்.

இந்தக் கோயிலில் ஆண்டுதோறும் சித்திரை மாதம் முளைப்பாரி திருவிழா நடைபெறுவது வழக்கம். இதே போல, இந்த ஆண்டு திருவிழா கடந்த மாதம் 28-ஆம் தேதி காப்புக் கட்டுதலுடன் தொடங்கியது. அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் இரவு அம்மனுக்கு சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் நடைபெற்றன. ஒவ்வொருநாள் இரவும் கோயில் முன்பாக கும்மி, முளைக்கொட்டு, கோலாட்டம் போன்ற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பத்தாவது நாளான புதன்கிழமை பக்தர்கள் விரதமிருந்து வீடுகளில் வளர்த்து வந்த முளைப்பாரிகளைத் தங்கள் தலையில் சுமந்து வீதி உலா வந்து கோயிலை அடைந்தனர். பின்னர், கோயிலிருந்து புறப்பட்டு, திருவாடானை -ஓரியூர் சாலை வழியாக அத்தாணி கண்மாயை அடைந்து முளைப்பாரிகளைக் கரைத்தனர். தொடர்ந்து,

பண்ணவயல் முத்துமாரியம்மன் கோயில் முளைப்பாரி திருவிழாவை முன்னிட்டு, புதன்கிழமை முளைப்பாரியை சுமந்து வந்த பக்தர்கள்.

பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் சுற்று வட்டாரத்திலிருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

தபசு கோலத்தில்...

பரமக்குடி சௌராஷ்டிர பிராமண சமுகத்துக்கு சொந்தமான ஈஸ்வரன் கோயில் சித்திரைத் திருவிழாவின் 8-ஆம் நாளான புதன்கிழமை தபசு கோலத்தில் நகர் வலம் வந்து அருள்பாலித்த விசாலாட்சி அம்பிகா.

பத்ரகாளியம்மன் கோயில் கயிறு குத்து திருவிழா

சிவகாசி, மே 7: சிவகாசி பத்ரகாளியம்மன் கோயில் சித்திரைப் பொங்கல் விழாவை முன்னிட்டு, புதன்கிழமை கயிறு குத்து திருவிழா நடைபெற்றது.

இந்தக் கோயிலில் சித்திரைப் பொங்கல் விழா கடந்த ஏப். 29- ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இதையடுத்து, தினசரி காலை, இரவு அம்மன் வெவ்வேறு வாகனங்களில் வீதியுலா வந்தனர். கடந்த திங்கள்கிழமை (மே 5) நடைபெற்ற 6-ஆம் திருவிழாவின்போது அம்மன் தங்கத் தாமரையில் கங்காள சொரூப திருக்கோலத்தில் வீதியுலா வந்தார். அன்றைய தினம் இரவு அம்மன் வெள்ளி ரிஷப வாகனத்தில் வீதியுலா வந்து, மாரியம்மன் கோயில் திடலில் கழுவேற்று லீலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. செவ்வாய்க்கிழமை (மே 6) பொங்கல் விழா நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து, புதன்கிழமை நடைபெற்ற கயிறு குத்து திருவிழாவை முன்னிட்டு பக்தர்கள் அக்னிச் சட்டி ஏந்தியும், அலகு குத்தியும் அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்தினர். இதைத்தொடந்து வியாழக்கிழமை (மே 8) தேரோட்டம் நடைபெறும். இதற்கான ஏற்பாட்டை கோயில் நிர்வாகத்தினர் செய்தனர்.

கமுதி நீதிமன்ற நீதிபதி பொறுப்பேற்பு

கமுதி, மே 7: ராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் உள்ள மாவட்ட உரிமையியல், குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதியாக ஜி.தங்க கார்த்திகா (**படம்**) புதன்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஏற்கெனவே கமுதி நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றிய சங்கீதா மதுரை மாவட்ட நீதிமன்றத்துக்கு இடமாறுதல் செய்யப்பட்டார். இதையடுத்து, சேலம் ஒருங்கிணைந்த நீதிமன்ற நீதிபதியாக இருந்த ஜி.தங்க கார்த்திகா கமுதி நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

இவர் புதன்கிழமை கமுதி நீதிமன்றத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார். இவருக்கு வழக்குரைஞர்கள் சங்க நிர்வாகிகள், நீதிமன்றப் பணியாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

கலசலிங்கம் நர்சிங் கல்லூரியில் முதலுதவி சிகிச்சைப் பயிற்சி

ஸ்ரீவில்லிபுத்தார் அருகேயுள்ள கிருஷ்ணன் கோவில் கலசலிங்கம் நர்சிங் கல்லூரியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முதலுதவி பயிற்சியில் பங்கேற்றவர்கள்.

ஸ்ரீவில்லிபுத்தூர், மே 7: ஸ்ரீவில்லிபுத்தூர் அருகேயுள்ள கிருஷ்ணன்கோவில் கலசலிங்கம் நர்சிங் கல்லூரியில் இருதயம், நுரையீரல் இயக்க முதலுதவிப் பயிற்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதற்கு கல்லூரி முதல்வர் வி.கலா தலைமை வகித்தார். கலசலிங்கம் பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.நாராயணன், பதிவாளர் வி.வாசுதேவன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

பயிற்சியாளர் எஸ்.அலெக்ஸ் இருதயம், நுரையீரல் இயக்கம் தடைபடுதல், மின்சாரம் பாய்ந்து பாதிக்கப்படுபவர், நீரில் மூழ்கியவர்கள், பாம்புக்கடி, பலத்த காயம் ஏற்பட்டவர்களுக்கு முதலுதவி செய்யும் முறைகள் குறித்து மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தார்.

இதற்கான ஏற்பாடுகளை பேராசிரியைகள் ஜி.தங்க சுப்புலட்சுமி, கே.நாகமுத்து ஆகியோர் ஏற்பாடு செய்தனர். முன்னதாக ஜெனிபர் பிரசில்லா வரவேற்றார். ராமலட்சுமி நன்றி கூறினார்.

புலவர் பழநி நூல்கள் அரசுடைமை: முதல்வருக்கு தமிழ் ஆர்வலர்கள் நன்றி

காரைக்குடி, மே 7: சிவகங்கை மாவட்டம், காரைக்குடியைச் சேர்ந்த மறைந்த புலவர் ஆ.பழநி எழுதிய 18 நூல்களை, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அரசுடைமையாக்கியதையடுத்து, அவருக்கு தமிழ் ஆர்வலர்கள் புதன்கிழமை நன்றி தெரிவித்தனர்.

புலவர் ஆ.பழநி எழுதிய 18 அரிய நூல்களை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கடந்த மே 5-ஆம் தேதி சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற பாவேந்தர் தமிழ் வார விழாவில் அரசுடைமையாக்கி, அதற்கான பரிவுத் தொகையாக ரூ.10 லட்சத்தை அவரது குடும்பத்தினரிடம் வழங்கினார்.

இதுகுறித்து அனிச்சம் அறக்கட்டளைத் தலைவர் சாமி. திராவிடமணி கூறியதாவது:

புலவர் ஆ.பழநி, பெரியார் கொள்கை வழியில் மாறாதவர். இவர் எழுதிய 18 நூல்களை தமிழக முதல்வர் அரசுடைமையாக்கி, அதற்கான பரிவுத்தொகை வழங்கியமைக்காக, காரைக்குடி தமிழ் ஆர்வலர்கள், அவரது குடும்பத்தினர், அனிச்சம் அறக்கட்டளை சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்றார் அவர்.

SOUTH INDIAN Bank
EXPERIENCE NEXT-GEN BANKING

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்:
முதல் மாடி, YMCA பில்டிங், அல்டோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

இ - ஏல விற்பனை அறிவிப்பு

Ref: RO/SAR/SN/8/2025-26 தேதி: 05.05.2025

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 6(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

1) M/s. E.K.S. ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட், 2/120, அஞ்சல் பெட்டி எண்.7, ரெங்கநாதபுரம் தெரு, தளவாய்புரம், இராஜபாளையம், விருதுநகர், தமிழ்நாடு-626188.

2) திரு.K.S.ரமேஷ், வசிப்பிடம் எண். 598, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

3) திருமதி.R. அமுதா, வசிப்பிடம் எண். 598, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

4) திரு.K.S. அன்பழகன், வசிப்பிடம் எண்.36C, பாம்பாளம்மன் கோயில் தெரு, செட்டியார்பட்டி, அய்யன்கொல்லங் கொண்டான், இராஜபாளையம், தமிழ்நாடு-626122.

5) திருமதி.A.மீனா, வசிப்பிடம் எண்.36C, பாம்பாளம்மன் கோயில் தெரு, செட்டியார்பட்டி, அய்யன்கொல்லங் கொண்டான், இராஜபாளையம், தமிழ்நாடு-626122.

6) திரு.K.S.செந்தில்குமார், வசிப்பிடம் எண்.1/602, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

7) திருமதி.S.முத்துலட்சுமி, வசிப்பிடம் எண்.1/602, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

8) திரு.K.S.செல்வராஜ், வசிப்பிடம் எண்.1/656, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

9) திருமதி.S.வரலட்சுமி, வசிப்பிடம் எண்.1/656, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

தி சௌத் இந்தியன் வங்கி, இராஜபாளையம் கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கொள்நிலை கவாதீனம் செய்யப்படிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 04.05.2025 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட், இராஜபாளையம் கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ 13,22,79,459.88-ஈ (ரூபாய் பதிமூன்று கோடியே இருபத்திரண்டு லட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து நானூற்றி ஐம்பத்தொன்பது மற்றும் பைசா எண்பத்தெட்டு மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே", "அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 30.05.2025 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தார் / உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்	ஐடம் எண் 1: திரு.K.S.ரமேஷ் ஐடம் எண் 2: திரு.K.S.ரமேஷ் ஐடம் எண் 3: M/s. E.K.S. ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்

சொத்து விபரம்:- ஐடம் எண். 1:- விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, செட்டியார்பட்டி கிராமத்திற்குட்பட்ட S.No. 331/1, துணைப்பிரிவின்படி தற்போது புதிய S.No. 331/1A, S.No.333/2, தற்போது புதிய S.No. 333/2A ஆகியவற்றில் அமைந்துள்ள 5567.50 சதுரடி இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், தளவாய்புரம் பஞ்சாயத்து, வார்டு எண்.2-ல், 3340.12 சதுரடி (தோராயமாக) அளவில் கதவு எண். 120, 120R, 120B8, 120B10 ஆகியவற்றைக் கொண்ட இண்டஸ்ட்ரியல் கட்டிடத்துடன் அதன் பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அத்துடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து திரு.K.S.ரமேஷ்-க்கு சொந்தமான இந்த சொத்து, செய்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 30.11.2006 அன்று பதிவுபெற்ற பாகப்பத்திர எண்.2315/2006 & 30.05.2013 அன்று பதிவுபெற்ற திருத்தப்பத்திர எண்.1526/2013 ஆகியவற்றில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: கிழக்கு மேற்கு பொது நடைபாதை, தெற்கே: K.S.செந்தில்குமாரின் பங்குக் கட்டிடம், கிழக்கே: 2-வது அட்டவணை கட்டிடம் மற்றும் வடக்கு தெற்கு பொதுச்சுவர், மேற்கே: வடக்கு தெற்கு தெரு.

ஐடம் எண். 2:- விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, செட்டியார்பட்டி கிராமத்திற்குட்பட்ட S.No. 331/1, துணைப்பிரிவின்படி தற்போது புதிய S.No. 331/1A, S.No.333/2, தற்போது புதிய S.No. 333/2A, சர்வே எண். 332/1, தற்போது புதிய S.No. 332/1P ஆகியவற்றில் அமைந்துள்ள 4640 சதுரடி இடத்தின் அனைத்து பகுதிகளுடன், தளவாய்புரம் பஞ்சாயத்து, வார்டு எண்.2-ல், 2156.01 சதுரடி (தோராயமாக) அளவில் கதவு எண். 1208-ஈ கொண்ட, குடியிருப்புக் கட்டிடத்துடன் அதன் பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து திரு.K.S.ரமேஷ்-க்கு சொந்தமான இந்த சொத்து, செய்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 30.11.2006 அன்று பதிவுபெற்ற பாகப்பத்திர எண்.2315/2006 & 30.05.2013 அன்று பதிவுபெற்ற திருத்தப் பத்திர எண்.1526/2013 ஆகியவற்றில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: கிழக்கு மேற்கு பொது நடைபாதை, தெற்கே: ராமசந்தரநாடார் கிழக்கு மேற்கு தெரு, கிழக்கே: பொது நடைபாதை, மேற்கே: 1-வது அட்டவணை வடக்கு தெற்கு பொதுச்சுவர்.

ஐடம் எண். 3:- விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, அரசியார்பட்டி கிராமத்திற்குட்பட்ட, i) சர்வே எண். 51/3-ல் 101 சென்ட், ii) சர்வே எண். 51/2-ல் 86 சென்ட் மற்றும் சர்வே எண். 50/2-ல் கிணற்றின் 2/5வது வலது முதலியன iii) சர்வே எண். 53-ல் இருக்கும் 6.61 ஏக்கரில் தென்புறமுள்ள 6 சென்ட், iv) சர்வே எண். 52-ல் இருக்கும் 95 சென்ட் இடத்தில் வடக்கிலுள்ள 58 சென்ட் & v) சர்வே எண். 53-ல் இருக்கும் 6.61 ஏக்கரில் வடக்கிலுள்ள 142 சென்ட் என்ற அளவுகளில் அமைந்திருக்கும் 393 சென்ட் (i.e. 101+86+6+58+142 சென்ட்) இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், களங்கப்பேரி பஞ்சாயத்தில் 45137.70 சதுரடி (தோராயமாக) அளவில் கதவு எண்கள். 719, 918, 919, 920, 1334 ஆகியவற்றைக் கொண்ட இண்டஸ்ட்ரியல் கட்டிடத்துடன் அதன் அனைத்து பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு சொந்தமான இந்த சொத்து, கீழராஜகுலராமன் சார்பதிவாளர் அலுவலகத்தில் 17.11.1997 அன்று பதிவுபெற்ற விற்பனைப்பத்திர எண். 1246/1997 & 20.03.1995 அன்று பதிவுபெற்ற விற்பனைப்பத்திர எண். 291/1995 ஆகியவற்றில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள் பின்வருமாறு:

i) 101 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: குருசாமி நாயக்கரின் ஈரநிலம் முதலியன, தெற்கே: M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு சொந்தமான நிலம், கிழக்கே: விற்பனைப் பத்திர எண். 1246/1997ல் உள்ள 2-வது அட்டவணை சொத்து, மேற்கே: ரோடு. ii) 86 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: குருசாமி நாயக்கரின் ஈரநிலம் முதலியன மற்றும் குருவய்யா நாடாரின் வறண்ட நிலம், தெற்கே: M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் கன்னியப்ப நாடாருக்கு சொந்தமான நிலம், கிழக்கே: குருவய்யா நாடாரின் வறண்ட நிலம், மேற்கே: விற்பனைப் பத்திர எண். 1246/1997-ல் உள்ள 1வது அட்டவணை சொத்து. iii) 6 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: விற்பனைப் பத்திர எண். 1246/1997-ல் உள்ள 1-வது அட்டவணை சொத்து, தெற்கே: M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு சொந்தமான நிலம், கிழக்கே: விற்பனைப் பத்திர எண். 1246/1997-ல் உள்ள 1-வது அட்டவணை சொத்து, மேற்கே: ரோடு. iv) 58 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: கிருஷ்ணமா ராஜாவின் நிலம், தெற்கே: கிருஷ்ணமா ராஜா, கணேசன் ராஜாவின் நிலம், கிழக்கே: விற்பனைப் பத்திர எண். 291/1995-ல் உள்ள 2-வது அட்டவணை சொத்து, மேற்கே: விற்பனைப் பத்திர எண். 291/1995-ல் உள்ள 2-வது அட்டவணை சொத்து. v) 142 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: கிருஷ்ணமா ராஜாவின் நிலம், தெற்கே: கிருஷ்ணமா ராஜா, கணேசன் ராஜாவின் நிலம், கிழக்கே: கன்னியப்ப நாடார் மற்றும் பிறருடைய நிலம், மேற்கே: மங்கம்மாள் சாலை.

நிர்ணயிக்கப்பட்ட தொகை	ஐடம் எண். 1:- ரூ.82,25,000/- (ரூபாய் எண்பத்திரண்டு லட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்). ஐடம் எண்.2:- ரூ.87,27,000/- (ரூபாய் எண்பத்தேழு லட்சத்து இருபத்தேழாயிரம் மட்டும்). ஐடம் எண்.3:- ரூ.4,54,27,000/- (ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்து நான்கு லட்சத்து இருபத்தேழாயிரம் மட்டும்).
முன் வைப்புத் தொகை (EMD)	ஐடம் எண். 1:- ரூ.8,22,500/- (ரூபாய் எட்டு லட்சத்து இருபத்திரண்டாயிரத்து ஐநூறு மட்டும்). ஐடம் எண்.2:- ரூ.8,72,700/- (ரூபாய் எட்டு லட்சத்து எழுபத்திரண்டாயிரத்து எழுநூறு மட்டும்). ஐடம் எண்.3:- ரூ.45,42,700/- (ரூபாய் நாற்பத்தைந்து லட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து எழுநூறு மட்டும்).
ஏல அதிகரிப்புத் தொகை	ரூ.50,000/-
இ-ஏல நேரம் மற்றும் தேதி	30.05.2025 அன்று 02.00 PM முதல் 03.00 PM வரை (விற்பனை முடியும் வரை 5 நிமிட வரம்பற்ற தன்நீட்சியுடன்)
வங்கிக்கு தெரிந்த வில்லங்கங்கள்	(ஐடம் எண் 1-க்காக) 01.01.1987 முதல் 01.12.2022 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை. (ஐடம் எண் 2-க்காக) 01.01.2019 முதல் 01.05.2024 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை. (ஐடம் எண் 3-க்காக) 01.11.2019 முதல் 08.05.2023 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை. மேலும், 05.02.2025 தேதியிட்ட Ref:MD/MDU/DO/SVKS/42161/M-12/PDC/8F/2024 & 11.04.2025 தேதியிட்ட MD/MDU/DO/SVK/42161/M-12/PDC/8F/2024 ஆகியவற்றின் மூலமாக சிவகாசி, மாவட்ட அலுவலகம், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூ. 61,269/- (ரூபாய் அறுபத்தோராயிரத்து இருநூற்றி அறுபத்தொன்பது மட்டும்). ஐடம் எண். 3-க்கு எதிரான வில்லங்கமாக உள்ளது.

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட். (Secured Creditor)-ன் இணையதளம் அதாவது www.southindianbank.com-ல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். https://bankauctions.in என்ற இணையதளத்திலும் விபரங்களை அறியலாம்.

சொத்து ஆய்வு, இ-ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் அல்லது ஏலங்களை சமர்ப்பித்தல் ஆகியவை பற்றி மேலும் விபரமாக அறிவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியையோ (Mobile No. 9894647220 / 9944522406) அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட், இராஜபாளையம் கிளையின் மொபைல் எண் 9500524762-ல் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

இடம்: மதுரை அங்கீகாரம் பெற்ற அலுவலர்

SOUTH INDIAN Bank

தி சௌத் இந்தியன் பேங்க் லிட்
பந்தல்குடி ரோடு, அருப்புக்கோட்டை. போன் : 04566-222422

லாக்கர் உடைப்புக்கான பொது அறிவிப்பு

எங்களது வங்கியில் லாக்கர் வைத்துள்ள திருமதி. வள்ளி மற்றும் திரு. என்.கே.சுப்பிரமணியன், பல்வேறு அறிவிப்புகள் மற்றும் கோரிக்கைகளுக்கு பிறகும் நீண்டகாலமாக நிர்ணயிக்கப்பட்ட லாக்கர் வாடகையை செலுத்த தவறிவிட்டனர். எனவே லாக்கர் உரிமையாளர்கள் ஒப்புக்கொண்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி வாடகை செலுத்தாத பட்சத்தில், அந்த லாக்கரை உடைக்க வங்கிக்கு உரிமை உள்ளது. அதன்படி 28.05.2025 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு மேற்படி லாக்கரை திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. லாக்கர் உரிமையாளர்கள் உரிய தேதிக்கு முன்னதாக கிளையை அணுகி நடவடிக்கையை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பிரேக் ஒப்பனுக்கான கட்டணங்கள் வாடகைதாரர்களால் ஏற்கப்படும் மற்றும் வாடகை பாக்கிகள் / பிற கட்டணங்கள் போன்றவற்றுடன் அதை வசூலிக்க சட்ட நடவடிக்கை எடுக்க வங்கிக்கு உரிமை உள்ளது.

லாக்கர் எண் BET 175

பெயர் : **திருமதி. வள்ளி & திரு. என்.கே.சுப்பிரமணியன்**
191, விருதுநகர் மெயின் ரோடு, அருப்புக்கோட்டை.

இடம் : அருப்புக்கோட்டை.
தேதி : 06.05.2025

தி சௌத் இந்தியன் பேங்க் லிட்
கிளை மேலாளர்

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியபட்ட)
பெருநிறுவன அலுவலகம்: ஸ்ரீ டவர்ஸ், பிளாட் எண்: 14A, சௌத் பேஸ், இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600032.
கிளை அலுவலகம் 5M, ராமசந்திரபுரம், தென்னூர், திருச்சி - 620 017.

கேட்பு அறிவிப்பு (பிரிவு 13(2) சர்ஃபாஷி சட்டம் 2002-ன் படி)

இந்த அறிவிப்பானது பின்வரும் கடன்தாரர்கள்/ இணை கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள், **ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக அறியப்பட்ட ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ்)** [இணைப்பு ஆணை -NCLT.CP(CAA/69-76(CHE)/2022.INCA (CAA) 5,6,7,36-40 (CHE)/2022,Dt 09.11.2022)]-யிடம் பெறப்பட்ட கடன் தொகையை சரிவர செலுத்த தவறியதனால் இந்த கடன் கணக்கு வாராக்கடன் (NPA) பிரிவில் சேர்க்கப்பட்டு, பிணைகாப்பு நிதிசொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைகாப்பு அமலாக்கச் சட்டம் 2002-இல் பிரிவு 13(2)-இன் கீழ் அறிவிப்பானது உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 விதி 3-இன் கீழ் கையொப்பமிட்ட அங்கீகாரம் பெற்ற அதிகாரி மூலம் தாங்களின் முகவரிக்கு அறிவிப்பானது அனுப்பப்பட்டு தங்களிடம் சேராமல் எங்கள் வசம் திரும்பி சேர்ந்தது. ஆகவே இந்த பொது அறிவிப்பு வெளிப்படுகிறது.

கடன்தாரர்கள் / இணை கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி	பிணைகாப்பு சொத்துக்களின் விபரங்கள்	கேட்பு அறிவிப்பு தேதி / நிலுவைதொகை	NPA தேதி
கடன் கணக்கு எண்: CDMLMTF2212210001			
திரு. அ.தனராஜ், உரிமையாளர் :**ஏடிகே கட்டுமானங்கள்,** த/பெ.அழகு, **திருமதி. த.ஈஸ்வரி,** க/பெ.தனராஜ், **(மேற்கண்ட இருவரின் வசிப்பிடம்)** எண்:4/30A, ஆழியாதன்மொழி வெட்டுக்குளம் - (அஞ்சல்), திருவாடானை (தாலுகா), ராமநாதபுரம்- (மாவட்டம்) - 623525. **திரு. பா.முருகன்**, த/பெ.பாலு, **திருமதி. மு.ஜெயந்தி**, க/பெ.முருகன், **(மேற்கண்ட இருவரின் வசிப்பிடம்)** எண்: பி,3/674, கைலாச சமுத்திரம், ஆர்.எஸ்.மங்கலம் (அஞ்சல்), திருவாடனை (தாலுகா), ராமநாதபுரம்- (மாவட்டம்) - 623 525.	இராஜசிங்கமங்கலம்: சார்பதிவாளர் அலுவலகம். இந்திராமடை கிராமத்தில், பட்டா எண்: 21029ல் கண்ட சர்வே எண்:38/1Bல் பிரிபட்ட தற்கால சப்டிவிசன் படி சர்வே எண் 38/1B1B முப்பத்தி எட்டு உட்பிரிவு ஒன்று B ஒன்று B மனையிடம் 0.02.0 ஏர்ஸ்க்கு கிழமேல் அடி 43 நாற்பத்தி மூன்று, தென்வடலில் மேல்புரம் அட